16 ஜூலை 2021

அன்பார்ந்த குடியிருப்பாளர்களே

## இல்ல மேம்பாட்டுத் திட்டக் கருத்துக்கணிப்பு - டோ யீ டிரைவ், புளோக் 1- 19

1 டோ யீ குடியிருப்பு நகருக்காக (புளோக் 1-19) இல்ல மேம்பாட்டுத் திட்ட (ஹெச்ஐபி) பணிக் குழு அமைக்கப்பட்டிருப்பது பற்றி முன்னதாக 25 மார்ச் 2021 அன்று உங்களிடம் தெரிவித்திருந்தேன். இந்தக் குழுவில் டோ யீ வசிப்போர் கட்டமைப்பின் அடித்தளத் தலைவர்கள், வீடமைப்பு வளர்ச்சிக் கழகம், ஹாலந்து-புக்கிட் பாஞ்சாங் நகர மன்றம் ஆகியவற்றின் பிரதிநிதிகள், குத்தகையாளர் / வடிவமைப்பு ஆலோசகர்கள் ஆகியோர் இடம்பெறுகின்றனர். நமது நகரில் ஹெச்ஐபி திட்டத்தின் அமலாக்கத்தை நிறைவேற்றி குடியிருப்பாளர்களுக்கு உதவி புரிவது பணிக் குழுவின் நோக்கம்.

### முன்னோட்டக் கருத்துக்கணிப்பு

2 வீடமைப்பு வளர்ச்சிக் கழகம், பணிக் குழுவின் ஆதரவுடன், முன்னோட்டக் கருத்துக்கணிப்பு நடத்த விரும்புகிறது. உங்கள் கட்டடத்தில் ஹெச்ஐபி மேம்பாட்டுப் பணி மேற்கொள்வதை நீங்கள் ஆதரிக்கிறீர்களா என்பதைக் கண்டறிவது கருத்துக்கணிப்பின் நோக்கம். *இது முறைப்படியான ஹெச்ஐபி வாக்கெடுப்பு அல்ல, முறைப்படியான வாக்கெடுப்பு பின்னொரு தேதியில் நடத்தப்படும்.*

### "ஆம்" அல்லது "இல்லை" என வாக்களிப்பதன் விளைவுகள்

3 **ஒவ்வொரு கட்டடத்திலும் உள்ள தகுதிபெறும் குடும்பங்களில் குறைந்தது 75 விழுக்காட்டினர் "ஆம்" என வாக்களித்தால் மட்டுமே ஹெச்ஐபி திட்டத்தை மேற்கொள்ள முடியும்**. கட்டடத்திற்குக் குறைந்தது 75% "ஆம்" வாக்குகள் கிடைத்துவிட்டால், அந்தக் கட்டடத்திலுள்ள குடியிருப்பாளர்கள் அனைவருக்கும் அத்தியாவசிய, விருப்பத்திற்குட்பட்ட, ஈஸ் மேம்பாடுகள் கிடைக்கும். குடும்பங்கள் தங்களுக்குத் தேவைப்படாத விருப்பத்திற்குட்பட்ட, ஈஸ் மேம்பாடுகளிலிருந்து விலகிக் கொள்ளலாம். ஒரு கட்டடத்திற்கு 75% "ஆம்" வாக்குகள் கிடைக்காவிட்டால், ஈஸ் மேம்பாடுகள் உள்ளிட்ட ஹெச்ஐபி மேம்பாடு அந்தக் கட்டடத்திற்குக் கிடைக்காது.

## ஹெச்ஜபி பணிகளின் விவரங்கள்

4 ஹெச்ஜபி திட்டத்தில் 3 உட்கூறுகள் உள்ளன: அத்தியாவசிய மேம்பாடுகள், விருப்பத்திற்குட்பட்ட மேம்பாடுகள் மற்றும் சுறுசுறுப்பான மூத்தோருக்கான மேம்பாடுகள் (ஈஸ் மேம்பாடுகள்).

| a) அத்தியாவசிய மேம்பாடுகள்: | b) விருப்பத்திற்குட்பட்ட மேம்பாடுகள்: | c) ஈஸ் மேம்பாடுகள்: |
|---|---|---|
| i) வீட்டின் உட்புறத்தில் உதிரும் கற்காரை பழுதுபார்ப்பு<br>ii) வீட்டின் உட்புறத்தில் வெடிப்புகள் பழுதுபார்ப்பு<br>iii) வார்ப்பிரும்பிலான கழிவுநீர்க் குழாய்கள் மாற்றப்படும்*<br>iv) மூங்கில் கம்புகளைச் சொருகும் தற்போதைய குழாய்களுக்குப் பதிலாகப் புதிய துணி உலர்த்தும் அடுக்குகள் பொருத்தப்படும்**<br><br>* உங்கள் வீட்டின் கழிவுநீர் / கழிவுப்பொருள் குழாய்கள் UPVC-இல் செய்யப்பட்டிருந்தால், குழாய்களும் குழாய் இணைப்புகளும் பரிசோதிக்கப்பட்டு, அவற்றில் ஒழுகல் அல்லது வெடிப்புகள் இருந்தால் மட்டுமே அவை மாற்றப்படும்.<br><br>** மாற்றுவதற்குக் குழாய்கள் இல்லாத வீடுகளில் (அதாவது எக்சிகியூட்டிவ் மேசனட் வீடுகள்) புதிய அடுக்கு பொருத்தப்படாது.<br><br>குடிமக்களின் வீடுகளுக்கு அத்தியாவசிய மேம்பாடுகளின் செலவு முழுவதற்கும் அரசாங்கம் நிதி அளிக்கும். | i) கழிவறைகள் மேம்பாடு<br>ii) கம்பிக்கதவு மாற்றப்படும்<br>iii) வாசல் கதவு மாற்றப்படும் #<br>iv) குப்பைக்குழி மூடி மாற்றப்படும்<br><br>விருப்பத்திற்குட்பட்ட மேம்பாடுகளில், நீங்கள் விரும்பும் மேம்பாடுகளைத் தேர்ந்தெடுக்கலாம். அதற்கேற்ப இணைக் கட்டணம் குறைக்கப்படும்.<br><br># தீத்தடுப்பு வாசல் கதவு உள்ள வீடுகள் வாசல் கதவை மாற்றத் தேவையில்லை. உரிமையாளர்கள் செலுத்தும் கட்டணம் அதற்கேற்ப குறைக்கப்படும். | i) அதிகபட்சம் 2 கழிவறைகளின்/குளியலறைகளின் தரைக்கற்களில் வழுக்கல் தடுப்பு ரசாயனம் பூசுதல்<br>ii) கைப்பிடிகள் பொருத்துதல்<br>iii) சாய்வுத்தளங்கள் அமைத்தல் ^<br><br>^ சக்கர நாற்காலியைப் பயன்படுத்துவோருக்குச் சாய்வுத்தளங்கள் (ஒற்றைப்படி) பரிந்துரைக்கப்படுகின்றன. சாய்வுத்தளம் அமைக்கக்கூடிய சாத்தியம் / வீட்டின் அமைப்புநிலை ஆகியவற்றின் அடிப்படையில் சாய்வுத்தளங்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.<br><br>நீங்கள் ஏற்கனவே ஈஸ் (நேரடி விண்ணப்பம்) திட்டத்தின்கீழ் ஒரு கழிவறையில்/குளியலறையில் கைப்பிடிகள் பொருத்தியிருந்தால் / வழுக்கல் தடுப்பு இரசாயனம் பூசியிருந்தால், இப்பணிகளை இரண்டாவது கழிவறையில்/குளியலறையில் மேற்கொள்ள தேர்ந்தெடுக்கலாம். ஆனால், நீங்கள் ஈஸ் (நேரடி விண்ணப்பம்) திட்டத்தின்கீழ் இரண்டு கழிவறைகளில்/குளியலறைகளில் கைப்பிடிகள் பொருத்தி / வழுக்கல் தடுப்பு இரசாயனம் பூசி, சாய்வுத்தளங்களும் அமைத்திருந்தால், ஹெச்ஜபி திட்டத்தின்கீழ் இந்த மேம்பாடுகள் உங்களுக்கு வழங்கப்படாது.<br><br>ஈஸ் மேம்பாடுகளில், உங்கள் தேவைகளின் அடிப்படையில் நீங்கள் மேம்பாடுகளைத் தேர்ந்தெடுத்து, அதற்கேற்ப இணைக் கட்டணம் செலுத்தலாம். |

## உத்தேச செலவும் கட்டணமுறையும்

5 ஹெச்ஜபி மேம்பாட்டுப் பணிக்கு அரசாங்கம் பெருமளவு நிதி உதவி வழங்குகிறது. குடும்பங்கள் மொத்த செலவில் ஒரு சிறு பகுதியை மட்டுமே செலுத்துவார்கள். தயவுசெய்து பின்னிணைப்பு 1 பாருங்கள்.

6 மேலும், மேம்பாட்டுச் செலவை வீட்டுரிமையாளர்கள் செலுத்த உதவியாக, நிதி உதவித் திட்டங்களையும் வீடமைப்பு வளர்ச்சிக் கழகம் வழங்குகிறது. நிதி உதவித் திட்டங்களின் விவரங்களுக்குப் பின்னிணைப்பு 2 பாருங்கள்.

7 முன்னோட்டக் கருத்துக்கணிப்பு, இதர ஆயத்தப்பணிகள் ஆகியவற்றை

நாங்கள் தொடர்ந்து மேற்கொண்டாலும், நமது ஹெச்ஜபி திட்டத்திற்கான அமலாக்கக் காலத்திட்டம், கொவிட்-19 கிருமிப் பரவலால் கட்டுமானத் துறைக்கு நேர்ந்திருக்கும் விளைவுகளால் பெரும்பாலும் பாதிக்கப்படலாம். எனவே, அமலாக்கம் தாமதமடைந்தால் புரிந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**முன்னோட்டக் கருத்துக்கணிப்பில் எவ்வாறு பங்கேற்பது**

8 டோ யீ குடியிருப்பாளர்கள் ஹெச்ஜபி திட்டத்தைப் பெரிதும் எதிர்பார்த்திருக்கிறார்கள். பின்னர் நடைபெறவிருக்கும் முறைப்படியான வாக்கெடுப்பில்[1] நமது குடியிருப்பாளர்களின் விருப்பங்கள் துல்லியமாகப் பதிவாகும் என நம்புகிறோம். எனவே, முன்னோட்டக் கருத்துக்கணிப்பில் பங்குபெறுமாறு அனைத்து குடும்பங்களையும் ஊக்குவிக்கிறோம்.

9 நீங்கள் ஹெச்ஜபி திட்டத்தை ஆதரித்தால், கருத்துக்கணிப்புப் படிவத்தில் “ஆம்” எனக் குறிப்பிடுங்கள். முறைப்படியான வாக்கெடுப்பில் ஒட்டுமொத்த கட்டடத்திற்குக் குறைந்தது 75% “ஆம்” வாக்குகள் கிடைத்தால் மட்டுமே குடியிருப்பாளர்களால் அத்தியாவசிய, விருப்பத்திற்குட்பட்ட, ஈஸ் மேம்பாடுகள் அனைத்தையும் அனுபவிக்க முடியும்.

10 நீங்கள் ஹெச்ஜபி திட்டத்தை ஆதரிக்காவிட்டால், கருத்துக்கணிப்புப் படிவத்தில் “இல்லை” எனக் குறிப்பிடுங்கள். உங்கள் குடும்பம் ஹெச்ஜபி திட்டத்தை ஆதரிக்கவில்லை என்பது இதன் அர்த்தம். முறைப்படியான வாக்கெடுப்பில் உங்கள் கட்டடத்திற்கு 75%-க்கும் குறைவான “ஆம்” வாக்குகள்” கிடைத்தால், ஒட்டுமொத்த கட்டடத்திற்கும் எந்த ஹெச்ஜபி மேம்பாடும் கிடைக்காது.

11 தயவுசெய்து இணைக்கப்பட்டுள்ள கருத்துக்கணிப்புப் படிவத்தில் உங்கள் விருப்பத்தைக் குறிப்பிட்டு, 16 **ஆகஸ்ட் 2021** தேதிக்குள் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்:

வீவக கிளமென்டி கிளை
புளோக் 453 கிளமென்டி அவென்யூ 3 #02-01
சிங்கப்பூர் 120453

12 மாறாக, நீங்கள் பூர்த்தி செய்த படிவத்தை www.hdb.gov.sg/efeedback இணையத்தளத்தின் வாயிலாக **மின்னஞ்சலில்** அனுப்பலாம் அல்லது இணைக்கப்பட்டுள்ள கருத்துக்கணிப்புப் படிவத்தில் காணப்படும் **QR குறியீட்டை ஸ்கேன் செய்து** இணையம்வழி கருத்துக்கணிப்பைப் பூர்த்தி செய்யலாம்.

13 உங்கள் பங்கேற்பை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். நமது குடியிருப்பு நகரை உங்களுக்கும் உங்கள் குடும்பத்தாருக்கும் மேம்பட்ட இல்லமாக்க ஒன்றிணைந்து செயல்படுவோம்.

உங்கள் உளமார்ந்த

திருவாட்டி சிம் ஆன்
புக்கிட் தீமா அடித்தள அமைப்புகளின் அடித்தள ஆலோசகர்

உள்ளிணைப்பு

*1 முறைப்படியான வாக்கெடுப்பில் சிங்கப்பூர் குடியுரிமையுள்ள குடும்பங்கள் மட்டுமே வாக்களிக்கலாம்*

# இல்ல மேம்பாட்டுத் திட்டம்
# செலவும் கட்டணமுறையும்
# புளோக் 1 முதல் 19, டோ யீ டிரைவ்

**மேம்பாட்டுச் செலவில் உங்கள் பங்கு**
மேம்பாட்டுச் செலவில் உங்கள் பங்கு, தவணைக் கட்டணமுறை ஆகியவை உங்கள் குடும்பம் எத்தகையது என்பதைப் பொறுத்து நிர்ணயிக்கப்படும்:-

| | |
|---|---|
| 1 | சிங்கப்பூர் குடியுரிமையுள்ள குடும்பம்; அல்லது |
| 2 | சிங்கப்பூர் நிரந்தரவாசத் தகுதியுள்ள குடும்பம். |

**1 சிங்கப்பூர் குடியுரிமையுள்ள குடும்பங்கள்**
ஹெச்ஐபி திட்டத்தின் செலவில் குறிப்பிடத்தக்க பகுதிக்கு அரசாங்கம் நிதி உதவி வழங்குவதால், சிங்கப்பூர் குடியுரிமையுள்ள வீட்டுரிமையாளர்கள் செலவில் ஒரு சிறு பகுதியை மட்டுமே செலுத்துவார்கள். அதோடு, மேம்பாடு உங்களுக்குக் கட்டுப்படியாகும் வகையில் எளிய தவணைக் கட்டணமுறையும் உண்டு.

a) சிங்கப்பூர் குடியுரிமையுள்ள குடும்பங்கள் செலுத்தவேண்டிய உத்தேசக் கட்டணம்

| வீட்டு வகை | 3-அறை | 4-அறை | 5-அறை | எக்சிகியூட்டிவ் வீடு | எக்சிகியூட்டிவ் மேசனட் |
|---|---|---|---|---|---|
| *விருப்பத்திற்குட்பட்ட மேம்பாடுகள்* | | | | | |
| *(ஒட்டுமொத்த செலவு: $11,000)* | | | | | *(ஒட்டுமொத்த செலவு: $15,550)* |
| உரிமையாளர் செலுத்தும் பங்கு | 5% ($550) | 7.5% ($825) | 10% ($1,100) | 12.5% ($1,375) | 12.5% ($1,943.75) |
| அரசாங்கம் செலுத்தும் பங்கு | 95% ($10,450) | 92.5% ($10,175) | 90% ($9,900) | 87.5% ($9,625) | 87.5% ($13,606.25) |

| வீட்டு வகை | 3-அறை | 4-அறை | 5-அறை | எக்சிகியூட்டிவ் வீடு | எக்சிகியூட்டிவ் மேசனட் |
|---|---|---|---|---|---|
| *ஈஸ் மேம்பாடுகள் (ஒட்டுமொத்த செலவு: $2,500)* | | | | | |
| உரிமையாளர் செலுத்தும் பங்கு | 5% ($125) | 7.5% ($187.50) | 10% ($250) | 12.5% ($312.50) | 12.5% ($312.50) |
| அரசாங்கம் செலுத்தும் பங்கு | 95% ($2,375) | 92.5% ($2,312.50) | 90% ($2,250) | 87.5% ($2,187.50) | 87.5% ($2,187.50) |
| *ஈஸ் மேம்பாடுகள் (ஒட்டுமொத்த செலவு: $2,900)* | | | | | |
| உரிமையாளர் செலுத்தும் பங்கு | 0% ($0) | | | | |
| அரசாங்கம் செலுத்தும் பங்கு | 100% ($2,900) | | | | |

வீட்டுரிமையாளர் செலுத்தவேண்டிய தொகைக்கு நடப்பிலுள்ள பொருள், சேவை வரி (ஜிஎஸ்டி) விதிக்கப்படும். தொகைகள் அனைத்தும் உத்தேசமானவை மட்டுமே. இறுதித் தொகை மேம்பாட்டுப் பணிகள் பூர்த்தி அடைந்த பிறகு மட்டுமே நிர்ணயிக்கப்படும்.

b) சிங்கப்பூர் குடியுரிமையுள்ள குடும்பங்களின் உத்தேச மாதாந்தரத் தவணைத்தொகை

| விருப்பத்திற்குட்பட்ட மேம்பாட்டுக்கு உரிமையாளர் செலுத்தவேண்டிய பங்கு | 3-அறை | 4-அறை | 5-அறை | எக்சிகியூட்டிவ் வீடு | எக்சிகியூட்டிவ் மேசனட் |
|---|---|---|---|---|---|
| ஒரேமுறை செலுத்தும் கட்டணம் | $550 | $825 | $1,100 | $1,375 | $1,943.75 |
| 5-ஆண்டு தவணைக்காலம் (மாதந்தோறும்)* | $11 | $16 | $21 | $27 | $37 |
| 10-ஆண்டு தவணைக்காலம் (மாதந்தோறும்)* | $6 | $9 | $12 | $14 | $20 |

| ஈஸ் மேம்பாட்டுக்கு உரிமையாளர் செலுத்தவேண்டிய பங்கு | 3-அறை | 4-அறை | 5-அறை | எக்சிகியூட்டிவ் வீடு |
|---|---|---|---|---|
| ஒரேமுறை செலுத்தும் கட்டணம் | $125 | $187.50 | $250 | $312.50 |
| 5-ஆண்டு தவணைக்காலம் (மாதந்தோறும்)* | $2.40 | $3.60 | $4.80 | $6.00 |
| 10-ஆண்டு தவணைக்காலம் (மாதந்தோறும்)* | $1.30 | $1.90 | $2.60 | $3.20 |

*வீடமைப்பு வளர்ச்சிக் கழகத்தின் தற்போதைய 2.60% வருடாந்தர சலுகை வட்டியின், மாதாந்தர நிலுவையின் அடிப்படையில் (அதாவது, மாதத்தின் தொடக்கத்தில் எஞ்சியுள்ள கடன் பாக்கியின் அடிப்படையில் மாதந்தோறும் வட்டி விதிக்கப்படுகிறது), நடப்பிலுள்ள 7% பொருள் சேவை வரியை உள்ளடக்கிய உத்தேசக் கணிப்புகள். விதிக்கப்படும் கட்டணம் நடப்பிலுள்ள வீடமைப்பு வளர்ச்சிக் கழக சலுகை வட்டி விகிதத்தையும் பொருள் சேவை வரியையும் அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

**2 சிங்கப்பூர் நிரந்தரவாசத் தகுதியுள்ள குடும்பங்கள்**

சிங்கப்பூர் நிரந்தரவாசத் தகுதியுள்ள வீட்டுரிமையாளர்கள் வாக்களிக்கத் தகுதி பெறமாட்டார்கள். உங்கள் கட்டடங்கள் இத்திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்தால், இல்ல மேம்பாட்டுத் திட்டத்தின் முழுச் செலவையும் நீங்கள் செலுத்தவேண்டும்.

**மேம்பாட்டு உதவித் தொகையைத் திருப்பித்தருதல்**

நீங்கள் அல்லது உங்கள் வீட்டின் கூட்டு உரிமையாளர்களில் யாராவது கட்டணம் விதிக்கப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டுக்குள் சிங்கப்பூர் குடியுரிமை பெற்று, நீங்கள் தொடர்ந்து வீட்டுரிமையாளராக இருக்கும் நிலையில், மேம்பாட்டு உதவித் தொகையை வீடமைப்பு வளர்ச்சிக் கழகம் உங்களிடம் திருப்பித் தரும். நீங்கள் மாதாந்தரத் தவணையாக மேம்பாட்டுக் கட்டணத்தைச் செலுத்திவந்தால், நீங்கள் சிங்கப்பூர் குடியுரிமை பெற்ற தேதியின் மறுமாதத்திலிருந்து வீடமைப்பு வளர்ச்சிக் கழகத்தின் சந்தை வட்டி விகிதம் சலுகை வட்டி விகிதமாக மாற்றப்படும்.

***தகவல்கள் வீடமைப்பு வளர்ச்சிக் கழகத்தால் வழங்கப்பட்டவை***

**பின்னிணைப்பு 2**

**மேம்பாட்டுச் செலவில் உங்கள் பங்கைச் செலுத்துதல்**

மேம்பாட்டுப் பணிகள் அனைத்தும் நிறைவடைந்த பிறகு மட்டுமே நீங்கள் கட்டணம் செலுத்தத் தொடங்குவீர்கள். கட்டணத்தை மொத்தமாக அல்லது ஒன்று முதல் பத்து ஆண்டுகளில் மாதாந்தரத் தவணையாகச் செலுத்தலாம். தவணைக் கட்டணத்திற்கு வட்டி விதிக்கப்படும். சிங்கப்பூர் குடியுரிமையுள்ள குடும்பங்களுக்கு, வீடமைப்பு வளர்ச்சிக் கழகத்தின் சலுகை வட்டி விகிதம் விதிக்கப்படும். சிங்கப்பூர் நிரந்தரவாசத் தகுதியுள்ள குடும்பங்களுக்கு, வீடமைப்பு வளர்ச்சிக் கழகத்தின் சந்தை வட்டி விகிதம் விதிக்கப்படும்.

மேம்பாட்டுச் செலவில் உங்கள் பங்கைச் செலுத்த நீங்கள் ரொக்கம் அல்லது உங்களது மத்திய சேமநிதி சேமிப்பைப் (வீட்டுரிமையாளர்கள் மட்டுமே) பயன்படுத்தலாம். நீங்கள் மத்திய சேமநிதியைப் பயன்படுத்தி மாதாந்தரத் தவணையைச் செலுத்தாவிட்டால், உங்கள் வசதிக்காக ஜைரோ மூலம் செலுத்துமாறு ஊக்குவிக்கப்படுகிறது. உங்கள் பிள்ளைகள் வீட்டின் கூட்டுரிமையாளர்களாக இல்லாவிட்டால், தற்போதைய "மத்திய சேமநிதி குறைந்தபட்சத் தொகை பணம் நிரப்பல் திட்டத்தின்கீழ்" நீங்களும் உங்கள் பிள்ளைகளும் தகுதிபெற்றால், உங்களது ஓய்வுக்காலக் கணக்கில் உங்கள் பிள்ளைகள் பணம் நிரப்பலாம். அதன்பிறகு, குறைந்தபட்சத் தொகை திட்டத்திலிருந்து கிடைக்கும் மாத வருமானத்தில் ஒரு பகுதியை அல்லது முழுவதையும் பயன்படுத்தி, மேம்பாட்டுக் கட்டணத்தின் மாதாந்தரத் தவணைத் தொகையை நீங்கள் செலுத்தலாம்.

**நிதி உதவித் திட்டங்கள்**

பின்வருவோருக்கு நிதி உதவி வழங்கப்படும்:

- <u>குடும்பத்தின் மொத்த மாத வருமானம் $2,000க்கு மேற்போகாத வீட்டுரிமையாளர்கள்</u>
  நீங்கள் தவணைக் காலகட்டத்தை அதிகபட்சமாக 25 ஆண்டுகள் வரை நீட்டிக்கலாம்.

- <u>55 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய வீட்டுரிமையாளர்கள்</u>
  உங்கள் வீடு விற்கப்படும் வரை அல்லது வேறோர் உரிமையாளருக்கு மாற்றப்படும் வரை, உங்கள் மேம்பாட்டுச் செலவின் தவணைத் தொகையை வட்டியுடன் சேர்த்து நீங்கள் ஒத்திப்போடலாம். ஆனால், அதற்குமுன் நீங்கள் முதலில் மத்திய சேமநிதி ஓய்வுக்காலத் தொகைக்கு மேலான மத்திய சேமநிதி சேமிப்பை (இருந்தால்) பயன்படுத்தி மேம்பாட்டுச் செலவைச் செலுத்தவேண்டும். அதற்குப் பிறகு, எஞ்சிய தொகையை வட்டியுடன் ஒத்திப்போடலாம்.

- <u>பணச் சிரமத்தில் இருக்கும் வீட்டுரிமையாளர்கள்</u>
  ஒவ்வொருவரின் சூழ்நிலையின் அடிப்படையில், தவணைத்தொகையை வட்டியோடு ஓராண்டு காலத்திற்கு (ஒவ்வோர் ஆண்டும் பரிசீலனைக்கு உட்பட்டது), அல்லது வீடு விற்கப்படும் வரை அல்லது வேறொருவருக்கு மாற்றப்படும்வரை ஒத்திப்போட வீடமைப்பு வளர்ச்சிக் கழகம் பரிசீலிக்கக்கூடும்.

***தகவல்கள் வீடமைப்பு வளர்ச்சிக் கழகத்தால் வழங்கப்பட்டவை***

தயவுசெய்து படிவத்தைப் பூர்த்தி செய்தி **16 ஆகஸ்ட் 2021.** தேதிக்குள் வீவக கிளமெண்டி கிளையிடம் திருப்பிக் கொடுக்கவும்.
உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால், 6395 5587 அல்லது 6395 5807 என்ற எண்ணில் எங்களுடன் தொடர்பு கொள்ளலாம் அல்லது www.hdb.gov.sg/efeedback இணையத்தளம் வாயிலாக உங்கள் கருத்துகளைச் சமர்ப்பிக்கலாம்.

# இல்ல மேம்பாட்டுத் திட்டம்
# கருத்துக்கணிப்புப் படிவம்

பெறுநர்: வீவக கிளமெண்டி கிளை
புளோக் 453 கிளமெண்டி அவென்யூ 3 #02-01
சிங்கப்பூர் 120453

**டோ யீ டிரைவ் புளோக் 1 முதல் 19 ஆகியவற்றுக்கான இல்ல மேம்பாட்டுத் திட்டம்**

உரிமையாளரின் பெயர் : ______________________________

முகவரி : புளோக் ________ டோ யீ டிரைவ்

வீட்டு எண் : # _______- __________

கைப்பேசி எண் : _________________ மின்னஞ்சல்: __________________

வீட்டுத் தொலைபேசி எண் : ____________ அலுவலகத் தொலைபேசி எண்: ___________

என் விருப்பம் [தயவுசெய்து குறியிடவும் (√)]:

☐ ஆம், நான் இல்ல மேம்பாட்டுத் திட்டத்தை (ஹெச்ஐபி) ஆதரிக்கிறேன்

☐ இல்லை, நான் இல்ல மேம்பாட்டுத் திட்ட (ஹெச்ஐபி) மேம்பாடுகள் எதையும் பெற விரும்பவில்லை

கருத்துகள் (இருந்தால்)

______________________________________________________________________

______________________________________________________________________

கையொப்பம்: ______________________

குறிப்பு: நீங்கள் கீழ்க்காணும் QR குறியீடு அல்லது இணையத்தளம் வாயிலாகவும் ஆய்வைப் பூர்த்தி செய்யலாம். ஒவ்வொரு வீட்டுக்கும் 1 ஆய்வை மட்டுமே பூர்த்தி செய்து சமர்ப்பிக்கவேண்டும்.

*https://go.gov.sg/tohyihipsurvey*